# கடன் மற்றும் அடைமான உடன்படிக்கை

**கடன் மற்றும் அடைமான உடன்படிக்கை ("உடன்படிக்கை")** நிறைவேற்றப்பட்ட இடம் ............................................................ தேதி ................ 20.......................... இங்கே குறிப்பிட்டுள்ளபடி , கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நபர்(கள்) (இதன்பிறகு கூட்டாக மற்றும் தனித்தனியாக "கடன் வாங்கியவர்" என்று குறிப்பிடப்படுவர். சூழல் அவசியம் ஏற்பட்டாலொழிய இந்த வார்த்தை தனது வாரிசுதாரர்களை உள்ளடக்கும் மற்றும் அவ்வப்போது ஒதுக்கப்படுபவைகளை உள்ளடக்கும்);

**ஆதரவாக**

கம்பெனிகள் சட்டம், 1956 - ன் கீழ் பதிவு செய்யப்பட்ட மற்றும் 3-வது தளம், எண் -165, மேக் டவர்ஸ், PH ரோடு மதுரவாயல், சென்னை - 600 095 என்ற முகவரியில் பதிவு அலுவலகத்தை கொண்ட ஒரு நிறுவனம் மற்றும் இங்கே கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள இடத்தில் தனது கிளை அலுவலகங்களில் ஒன்றை கொண்டுள்ளது (இதன்பிறகு "FICCL" அல்லது "கடன் கொடுப்பவர்" என்று குறிப்பிடப்படுவர். சூழல் அவசியம் ஏற்பட்டாலொழிய, இந்த வார்த்தை தனது வாரிசுதாரர்களை உள்ளடக்கும் மற்றும் அவ்வப்போது ஒதுக்கப்படுபவைகளை உள்ளடக்கும்)

**அப்படியிருக்க**

கடன் வாங்கியவரின் வேண்டுகோளின் பேரில் FICCL மானியம் வழங்க ஒப்புக் கொள்கிறது/மானியம் வழங்கியது / இங்கே தோன்றும் (இனிமேல் கூட்டாக அல்லது தனித்தனியாக "கடன்" என்று குறிப்பிடப்படும்) விதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி அட்டவணையில் குறிப்பிட்டுள்ள வரம்பு (கள்) வரை அத்தகைய கடன் வசதியை வழங்க ஒப்புக்கொள்கிறது. எனினும், FICCL தனது விருப்பப்படி, எந்த காரணத்தையும் கூறாமல், அவ்வப்பொழுது புதுப்பிக்கவோ அல்லது குறைக்கவோ, அதிகரிக்கவோ அல்லது ஒட்டுமொத்தமாக திரும்பப்பெறவோ அல்லது லோனை ரத்து செய்யவோ கூடும்.

FICCL

☞ ☞ ☞

**கடன் வாங்கியவர்** | **இணை - க்டன் வாங்கியவர்** | **அங்கீகாரம் பெற்ற கையொப்பமிடுபவர்**

மேலே கூறப்பட்டுள்ளபடி FICCL கடன் வழங்குவதை கருத்தில் கொண்டு, கடன்வாங்குபவர் இங்கே FICCL-உடன் ஒப்புக்கொள்கிறார், பதிவு செய்கிறார் மற்றும் உறுதிபடுத்துகிறார் :

1. மிக முக்கியமான ஆவணமான கடன் வாங்கியவரின்விண்ணப்ப ("MID') விவரங்கள் இங்கே கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளன மற்றும் இவை இந்த உடன்படிக்கை மற்றும் இங்கே கீழே FICCL -ஆல் முன் வைக்கப்பட்ட லோனின் ஆதாரமாக இருக்கும் மற்றும் விண்ணப்பம் மூலம் வழங்கப்பட்ட ஒவ்வொரு கூற்று மற்றும் விவரங்கள் சரியாக உள்ளதை கடன் வாங்கியவர் இங்கே உறுதி படுத்துகிறார்.
2. கடன்வாங்கியவரின் விண்ணபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களின் உண்மைத்தன்மையை பாதிக்கும் அல்லது கடன் வாங்கியவரின் வணிகத்தின் மீது தாக்கம் உண்டாக்கும் ஏதேனும் சூழ்நிலைகள் பற்றி அத்தகைய நிகழ்வின் 7 நாட்களுக்குள் எழுத்து மூலம் FICCL-க்கு தெரிவிக்க கடன் வாங்கியவர் ஒப்புக் கொள்கிறார் மற்றும் சம்மதிக்கிறார்.
3. "சமமான மாதாந்திர தவணை (EMI)" என்றால், கடன் காலத்தின்போது வட்டியுடன் மெதுவாக கடனை, கடன் கொடுத்தவருக்கு திருப்பியளிக்க, தேவையான மாதாந்திர தவணைத் தொகை என்று பொருள்.
4. இங்கு இதன்பிறகு குறிப்பிட்டபடி FICCL-ஆல் முன்னதாக கடன் தொகை கேட்கப்படாவிட்டால், வட்டி, செலவுகள் மற்றும் லோனின் கீழ் நிலுவையிலுள்ள அனைத்துப் பிற தொகைகளுடன் லோனை உடனடியாக திருப்பியளிக்குமாறு கோர FICCL-க்கு அதிகாரம் அளிக்கப்படும். அவ்வப்பொழுது FICCL -ஆல் நிர்ணயிக்கப்படும் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, முன்னதாக லோனை செலுத்த கடன் வாங்கியவருக்கு அனுமதி அளிக்கப்படும்.
5. அடைமானம் / கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட தனது MID மூலமாக FICCL நிர்ணயித்த அந்த கடனீட்டின் அடைமானம் மூலம் கடன் பெறப்படும் என்பதை கடன் வாங்கியவர் ஒப்புக்கொள்கிறார்.
6. FICCL-ன் தனிப்பட்ட விருப்பத்தை பொறுத்து, ஒன்று அல்லது அதிக தவணைகளில் கடன் வாங்கியவருக்கு FICCL கடனை பட்டுவாடா செய்யும்/செய்தது/செய்யப்பட்டது.
7. இங்கே கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வீதத்தில் RBI-ஆல் அவ்வப்பொழுது பிறப்பிக்கப்படும் மற்றும் பொருந்தும் வழிகாட்டு நெறிகளின்படி, கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வட்டி வீதத்தில் மாதாந்திர இடைவெளியுடன் கடன் கணக்கில் (கள்)தினசரி நிலுவைகள் மீது கணக்கிடப்படும் கடன் தொகை மீது கடன் வாங்கியவர் வட்டி செலுத்த வேண்டும். ஆனால், எந்த ஒரு நேரத்திலும் மற்றும் அவ்வப்பொழுது கடன் மீதான வட்டி வீதத்தை மாற்ற FICCL-க்கு அதிகாரம் வழங்கப்படும் மற்றும் அத்தகைய திருத்தப்பட்ட வட்டி வீதம் அமலுக்கு வரும் மற்றும் கடன் வாங்கியவரால் கட்டப்படும் என்று எப்பொழுதும் கருதப்படும் மற்றும் பெறப்படும். வட்டி வீதங்களின் திருத்தம் மீதான நோட்டீஸின் தேவையை, கடன் வாங்கியவர் இதன் மூலம் தள்ளுபடி செய்கிறார்.
8. மேலும், FICCL-ன் பிற உரிமைகள் மற்றும் தீர்வுகளுக்கு எந்தவித பாரபட்சமுமின்றி, கடன் கணக்கில் (களில்) நிலுவையிலுள்ள தொகை மீது உயர்த்தப்பட்ட வட்டி வீதங்களை தனது சொந்த விருப்பத்தின் பேரில் வசூலிக்க FICCL-க்கு உரிமை உண்டு. அல்லது நிலுவையிலுள்ள அதன் ஒரு பகுதி அல்லது கடன் வாங்கியவர் வட்டி கட்ட தவறிய பிழைக்காக அல்லது முறைகேடான கட்டணத்துக்காக, FICCL பொருத்தமானதாக நினைக்கும் காலத்துக்கு உயர்த்தப்பட்ட வட்டி வீதங்களை விதிக்க FICCL-க்கு உரிமை உண்டு.
9. கடன் வாங்கியவர் தனது பாக்கிகளை கட்டத் தவறினாலோ அல்லது கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளில் எதையேனும் புறக்கணித்தாலோ/ பின்பற்றத் தவறினாலோ, அபராதம் / கூடுதல் வட்டி விதிக்கப்படும் மற்றும் லோனின் கீழ் வாங்கப்பட்ட சொத்துக்களின் மீதும் அவை விதிக்கப்படும் மற்றும் புறக்கணித்த / கட்டத்தவறிய தேதியிலிருந்து, கட்டணம் கட்டப்படும் வரை அல்லது விதி மீறல் திருத்தப்படும் வரை, உடன்படிக்கையின் கீழ் FICCL-க்கு கிடைக்கக்கூடிய பிற உரிமைகளுக்கு பாரபட்சமின்றி அதிக வட்டி விதிக்கப்படும். ஆனால், அபராதம் / கூடுதல் வட்டியை செலுத்தும் கடமை , இந்த உடன்படிக்கையின் கீழ் கடன் வாங்கியவர் புறக்கணித்த / கட்டத்தவறிய ஏதேனும் தவணையின் தள்ளுபடியாக கருதப்படாது மற்றும் கடன் வாங்கியவருக்கு அத்தகைய புறக்கணிப்பு / கட்டத்தவறிய பிழையை தொடர்ந்து தீர்த்து வைக்கும்/ திருத்தும் கடமை உண்டு.
10. ஒருவேளை இந்த உடன்படிக்கையின் ஏதேனும் விதிகள் மற்றும் நிபந்தனைகளை கடன் வாங்கியவர் கடைபிடிக்கத் தவறினாலோ அல்லது புறக்கணித்தாலோ, மொத்த அசல் தொகை மற்றும் வட்டியை கேட்கும் உரிமை FICCL-க்கு உண்டு. தொடர்ந்து எஞ்சிய பாக்கி மற்றும் நிலுவைத் தொகையையும் செலுத்த வேண்டியிருக்கும்.
11. தொடர்ந்து ஏதேனும் பின்வரும் நிகழ்வுகள் உண்டானால், இந்த உடன்படிக்கையின் கீழ் கட்டத்தவறிய நிகழ்வாக கருதப்படும். :
    a) இந்த உடன்படிக்கையின் ஏதேனும் விதிகள் மற்றும் நிபந்தனைகளை புறக்கணித்தல்;
    b) அசல் தொகையின் ஒன்று அல்லது அதிக தவணைகளில் ஏதேனும் ஒன்று அல்லது வட்டி அல்லது FICCL-க்கு கட்ட வேண்டிய வேறு ஏதேனும் தொகை உரிய நேரத்தில் செலுத்தப்படா விட்டால்;
    c) கடன் வாங்கியவரின் சொத்தின் ஏதேனும் ஒரு பகுதி மீதோ அல்லது எதிராகவோ ஏதேனும் பறிமுதல் அல்லது ஆணை சுமத்தப்பட்டால் அல்லது பிறப்பிக்கப்பட்டால் மற்றும் அது 14 நாட்களுக்குள் நிறைவேற்றப்படா விட்டால் அல்லது காலி செய்யப்படா விட்டால் அல்லது கடன் வாங்கியவரின் சொத்துக்கென ஒரு வாங்குபவர் நியமிக்கப்பட்டால் அல்லது கடன் வாங்கியவரின் சொத்துக்கள் அல்லது வணிகத்தின் ஏதேனும் ஒரு கணிசமான பகுதி பறிக்கப்படும் என்று கருதப்பட்டால்;
    d) கடன் வாங்கியவரின் வணிக முயற்சியை முழுதாகவோ அல்லது ஒரு பகுதியாகவோ இடைநிறுத்தம் செய்ய ஏதேனும் அரசு அல்லது வேறு ஏதேனும் அதிகாரியால் ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டால்;
    e) கடன் வாங்கியவர் பணம் கட்டுவதை நிறுத்தி விட்டாலோ அல்லது தொடரவில்லை என்றாலோ அல்லது தனது/தங்களின் வணிகத்தை நடத்துவதை நிறுத்த முடிவு செய்தாலோ அல்லது தங்களின் வணிகம் அல்லது விவசாயத் தொழிலை முழுதாகவோ அல்லது கணிசமான பகுதியாகவோ விற்றுவிட்டாலோ ;
    f) கடன்வாங்கியவர் பண விவரங்கள் தொடர்பாக FICCL-க்கு அளித்த ஏதேனும் தகவல் பிழையானதாகவோ அல்லது முழுமையற்றதாகவோ கண்டு பிடிக்கப்பட்டால் ;
    g) பத்திரங்களில் முழுமையாகவோ அல்லது ஏதேனும் ஒரு பகுதியாகவோ ஏதேனும் சரிவு அல்லது வலுக்குறைவோ உண்டானால் அல்லது மதிப்பு அல்லது சந்தை விலையில் ஏதேனும் சரிவு அல்லது மதிப்பிறக்கம் உண்டானாலோ (உண்மையாகவோ அல்லது நியாயமாகவோ எதிர்பார்க்கப்பட்டது), மற்றும் பத்திரங்களின் இயல்பு அல்லது மதிப்பில் திருப்தியற்றவையாக ஆனதாக அவை FICCL-ன் கருத்தில் தோன்றினால்;
    h) கடன் வாங்கியவருக்கு எதிரான ஏதேனும் இணைப்பு, உடைமை பற்றுகை அல்லது பிற செயல்முறைகள் ஏதேனும் இருந்தால் அல்லது ஏதேனும் பத்திரங்கள் வலியுறுத்தப்பட்டால் அல்லது சுமத்தப்பட்டால் ;
    i) கடன் வாங்கியவரின் இறப்பு, நொடித்துப் போதல், தொழில் தோல்வி, கடனை திருப்பாமல் நொடித்துப் போகும் செயல், திவாலாதல், தொழிலை கை விடல் அல்லது கடன் வாங்கியவர், கடனை கொடுத்தவர்களுக்கு பணம் செலுத்துவதை நிறுத்துதல் அல்லது அவ்வாறு செய்யப்போவதாக பயமுறுத்துதல் அல்லது நொடித்துப் போதல், திவாலாதல் அல்லது தொழில் கலைப்புக்கான ஏதேனும் மனுத்தாக்கலை கடன் வாங்கியவர் செய்தால் அல்லது அவருக்கு எதிராக செய்யப்பட்டால்
12. மேலே குறிப்பிட்டபடி பணம் செலுத்த தவற நேரிட்டால், FICCL-க்கு பின்வரும் உரிமைகள் உண்டு :
    a) கடன் கொடுப்பதை ஊக்குவித்து, அனைத்து நிலுவைகளையும் உடனடியாக மீட்டல்
    b) கடன் பட்டுவாடா மேலும் செய்யப்படுவதை நிறுத்துதல் / லோனை திரும்பப் பெறுதல் ;
    c) தானாகவேவோ, அல்லது ஏதேனும் மீட்பு ஏஜெண்ட்டுகள் மூலமாகவோ அல்லது FICCL நியமிக்கும் வக்கீல்கள் மூலமாகவோ பத்திரங்களை கையகப்படுத்துதல் ;
    d) தனது நிலுவைத் தொகைகளை மீட்கவும், பங்கு பத்திரங்களை அமலாக்கவும் பொருத்தமானதாக தோன்றும் வேறு ஏதேனும் நடவடிக்கையை எடுத்தல்.
13. கடன் வாங்கியவருக்கு லோனைத் தர இசைதல்/ வழங்குதல்/வழங்க ஒப்புதல், இந்த உடன்படிக்கையின் கீழ் கடன் வாங்கியவரின் கடமைகளை செயல்படுத்த தொடர்ந்து பாதுகாத்தல், இங்கே அட்டவணையில் அதிக குறிப்பாக விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களின் சட்டரீதியான மற்றும் பெனிஃபீஷியல் உடைமையாளராக (இனிமேல் "அடைமான சொத்துக்கள்" அல்லது "அடைமான பாதுகாப்பு" என்று குறிப்பிடப்படும்) இங்கே கடன் வாங்கியவர் FICCL-க்கு அவ்வப்பொழுது கொடுக்க வேண்டிய அனைத்து பணத்துக்குமான செக்யூரிடியாக FICCL-க்கு ஆதரவாக பிரத்தியேக பொறுப்பை அளிப்பது மூலம் கடன் வாங்கியவர் தனது அனைத்து சொத்துக்களையும் அடைமானமாக FICCL-டம் வைக்கிறார். அவை அனைத்தும் FICCL - டம் அடைமானமாக வைக்கப்படுவதுடன், FICCL-க்கு கடன் வாங்கியவர் கொடுக்க வேண்டிய அனைத்து கடன்கள் அல்லது பொறுப்புக்களுடன், FICCL-க்கு கொடுக்க வேண்டிய அல்லது அதற்கு உண்டான எல்லா வட்டிகள், கமிஷன்கள், செலவுகள், கட்டணங்கள் மற்றும் எந்த ஒரு செக்யூரிடி(கள்)-ன் அமலாக்கத்துக்கானவை உள்ளிட்டவையுடன், லோனை திருப்பச் செலுத்துவதற்கென செக்யூரிடியாக்கான முதல் பொறுப்பாளராகவும் FICCL இருக்கும்.

**FICCL**

☞ ☞ ☞

**கடன் வாங்கியவர்** **இணை - க்டன் வாங்கியவர்** **அங்கீகாரம் பெற்ற கையொப்பமிடுபவர்**

14. FICCL-க்கு ஆதரவாக இங்கு உருவாக்கப்பட்ட அடைமானம் FICCL-க்கு ஒரு செக்யூரிடியாக வேலைபுரியும். அது, இங்கே கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி லோனின் கீழ் இருக்கும் நிலுவையை FICCL எந்த ஒரு நேரத்தில் கேட்கும்போதும் அல்லது முடிவாக அதற்கு திரும்ப செலுத்தவென ஏற்கனவே செக்யூரிடியாக FICCL வைத்திருப்பவையுடன் கூடுதலாக இருக்கும். FICCL-க்கு கொடுக்க வேண்டிய 'மீதி' என்ற வார்த்தையில், லோனின் கீழ் அவ்வப்பொழுது எஞ்சியிருக்கும் அசல் தொகைகள், அவை கோரப்பட்டாலும், இல்லாவிட்டாலும், மற்றும் கூடுதல் வட்டி, ஏதேனும் இருந்தால், அபராத வட்டி/கமிஷன் கட்டணங்கள், வட்டி வரி, ரொக்கமாக்கப்பட்ட சேதாரங்கள், அவை என்ன பெயரில் அழைக்கப்பட்டாலும், இனிமேல் குறிப்பிடப்படும் வட்டியில் மற்றும் பாணியில் தினசரி கணக்கிடப்படுபவை மற்றும் அனைத்து செலவுத் தொகைகள் (வக்கீல் மற்றும் வாடிக்கையாளருக்கு இடையில்) மற்றும் அடைமானம் வைக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் விற்பனை செய்யப்பட்ட பிற சொத்துக்கள் உடன் தொடர்புடையவற்றில் FICCL செலுத்திய தொகை அல்லது செலவுகள் மற்றும் கடன் வாங்கியவரால் FICCL-க்கு கொடுக்கப்படாமல் எஞ்சியிருக்கும் வேறு ஏதேனும் தொகை அல்லது இங்கே கீழே அறிவிக்கப்பட்டவை, கடன் கணக்குகள் மற்றும் வட்டியில் பற்று வைக்கப்படும்.

15. இந்த உடன்படிக்கையின் விதிகளுடன் ஒத்துப்போகும் விதத்தில் மற்றும் / அல்லது சட்டத்தின் கீழ் கடன் வாங்கியவரின் கணக்கில் உள்ள ஏதேனும் நிலுவைகளுக்கு எதிராக பற்றுரிமை மற்றும் சரியீட்டு உரிமையை FICCL கொண்டுள்ளது.

16. FICCL-ன் எழுத்து மூலமான முன் கூட்டிய அனுமதியில்லாமல் அடைமானம் வைக்கப்பட்ட சொத்துக்கள் அல்லது வேறு ஏதேனும் சொத்துக்கள் மீது எந்த கட்டணத்தையும் கடன் வாங்கியவர் உண்டாக்க முடியாது.

17. FICCL- இடம் அடைமானம் வைக்கப்பட்ட சொத்துக்கள் அல்லது வேறு ஏதேனும் சொத்துக்கள் மீது எந்த கட்டணத்தையும் கடன் வாங்கியவர் உண்டாக்க முடியாது.

18. சட்டத்தின் கீழ், FICCL-க்கு கொடுக்கப்பட்ட கடன் வாங்கியவரின் பணம், செக்யூரிட்டிகள் அல்லது பிற சொத்துக்களுக்கு எதிரான அனைத்து பற்றுரிமைகள் மற்றும் உரிமைகளுடன், இப்பொழுது அல்லது இதன் பிறகு FICCL-ன் வசத்தில் உள்ள கடன் வாங்கியவரின் பணம், செக்யூரிட்டிகள் அல்லது பிற சொத்துக்களுக்கு எதிரான அனைத்து பற்றுரிமைகள் மற்றும் உரிமைகள், பொதுவான அல்லது விசேஷ கணக்கு அல்லது வைப்பு ஆகிய எதுவாக இருந்தாலும் அல்லது பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தாலோ அல்லது வேறு எதுவாக இருந்தலும், எதில் வைக்கப்பட்டிருந்தாலும் FICCL-க்கு உரிமை உண்டு; மற்றும் கோரிக்கையின்றியோ அல்லது கடன் வாங்கியவருக்கு நோட்டிஸ் இன்றியோ ஒவ்வொரு பற்றுரிமை மற்றும் உரிமை செலுத்துதல் கையாளப்படலாம். FICCL-ன் தரப்பில் எந்த ஒரு செயல் அல்லது நடத்தை, அல்லது அத்தகைய பற்றுரிமை அல்லது உரிமையை கையாளுவதில் ஏதேனும் அலட்சியம் அல்லது அவ்வாறு செய்வதில் ஏதேனும் தாமதம் ஆகியவற்றால் எந்த பற்றுரிமை அல்லது உரிமையும் தள்ளுபடி செய்ததாக கருதப்படாது. மற்றும் FICCL -ஆல் எழுத்து மூலம் அத்தகைய உரிமைகள் மற்றும் பற்றுரிமைகள் குறிப்பாக தள்ளுபடி செய்ததாக வெளியிடப்பட்டால் மட்டுமே உரிமை மற்றும் பற்றுரிமைக்கான அனைத்து உரிமைகளும் தொடர்ந்து முழு வீச்சில் மற்றும் பலனில் இருக்கும்.

19. FICCL-ன் முடிவு/செயல்/பாலிசியுடன் மட்டுமின்றி, ஏதேனும் பற்று நுழைவை திருப்புவதாக இருந்தாலும், அல்லது வட்டியை பற்று வைக்க வேண்டாம் என்றாலும் அல்லது தனது பதிவேடுகளில் அல்லது லெட்ஜர் கணக்கில் அல்லது கணக்கு அறிக்கையில் எந்த பற்று நுழைவையும் பதிவு செய்ய வேண்டாம் என்றாலும், எந்த ஒரு காலகட்டமாக இருந்தாலும், கடன் வாங்கியவர் மாதாந்திர காலக்கெடுவுடன் மொத்த நிலுவைத் தொகை, பற்று நிலுவை மற்றும் கூட்டு வட்டி ஆகியவற்றை, அத்தகைய அனைத்து தொகைகள், அவற்றுடன் வட்டி, அபராத வட்டி, வட்டி கமிஷன், செலவுகள், கட்டணங்களை FICCL -ஆல் திரும்பப்பெறும், மீட்கும் அல்லது வசூலிக்கும் தேதி வரை மற்றும் எந்த ஒரு நேரத்திலும், எவையாயினும் FICCL-ஆல் எந்த ஒரு குறிப்பு, அறிவிப்பு அல்லது அறிக்கை எதுவும் வெளியிடப்படாமல், நடப்பிலுள்ள அல்லது நிச்சயிக்கப்பட்ட அல்லது அவ்வப்பொழுது FICCL-ஆல் நிச்சயிக்கப்படும் வீதங்களில் கடன் வாங்கியவர் FICCL-க்கு செலுத்த கட்டுப்படுகிறார் மற்றும் பொறுப்பேற்கிறார்.

20. FICCL -ன் அனைத்து விதிகள், நிபந்தனைகள், தேவைகள், தடைகள், வகைமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது FICCL தரப்பிலிருந்து எந்த ஒரு குறிப்பு, நோட்டிஸ் அல்லது அறிவிப்புமின்றி எனது /நமது வசதிகள், வரம்புகள் அல்லது கணக்குகள் தொடர்பாக தனது தனிப்பட்ட விருப்பத்தின் பேரில் எந்த ஒரு நேரத்திலும் அல்லது அவ்வப்பொழுது FICCL செய்த அல்லது இனிமேல் செய்யப்போகும் ஏதேனும் திருத்தங்கள் அல்லது மாற்றங்கள் ஆகியவற்றுக்கு கட்டுப்பட, ஏற்றுக்கொள்ள, திருப்தி கொள்ள, நிறைவேற்ற, செயலாற்ற மற்றும் இணங்க கடன் பெற்றவர் இங்கு சம்மதிக்கிறார், மேற்கொள்கிறார், பதிவு செய்கிறார், அறிவிக்கிறார், ஒப்புக்கொள்கிறார், உறுதி கூறுகிறார், வாக்குறுதி கூறுகிறார், ஒப்புகை அளிக்கிறார்.

21. இந்த ஆவணம் தொடர்பாக ஏதேனும் ஸ்டாம்ப் ட்யூட்டி, அபராதம், பதிவுக் கட்டணங்கள் அல்லது பற்றாக்குறை, ஏதேனும் இருந்தால், அவற்றை கடண் வாங்கியவர் ஏற்றுக்கொண்டு , பணம் செலுத்துவார்; FICCL அதற்கான பொறுப்பேற்காது.

22. தவணை கட்டத் தவறினால், இங்கே விதிக்கப்பட்டுள்ள செக்யுரிடிகளை கைப்பற்ற/ கையகப்படுத்தவும், அவற்றை விற்று தனது நிலுவைகளை மீட்கவும் FICCL-க்கு உரிமை உண்டு.

23. FICCL பொருத்தமானவர்களாக கருதுபவர்களை தனது ஏஜெண்ட்டுகளாகவும், ட்ரஸ்டிகளாகவும் நியமிக்கும் உரிமையை FICCL தன்னிடம் வைத்துள்ளது மற்றும் கடன் வாங்கியவர் FICCL-க்கு கடன் வாங்கியவர் கொடுக்க வேண்டிய அனைத்து நிலுவைத் தொகைகளையும் கடன் வாங்கியவரிடமிருந்து கோர, அத்தகைய பேமெண்ட்டுகளை கடன் வாங்கியவரிடமிருந்து பெற, FICCL-க்கு ஆதரவாக வசூலிக்கப்பட்ட சொத்துக்களை மீட்க/ மீண்டும் தன்வசம் எடுத்துக்கொள்ள,கடன் மற்றும் லோனின் கீழ் நிலுவையிலுள்ள அனைத்து தொகைகளையும் மீட்க, கடன் வாங்கியவருக்கு எதிராக செயல்பட, கடன் வாங்கியவரால் உருவாக்கப்பட்ட செக்யூரிடியை முன்கூட்டியே முடிக்க, கடன் வாங்கியவருக்கு எதிராக வழக்கு தொடுக்க மற்றும் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க மற்றும் துணை -கடன் வாங்கியவர் மற்றும் உத்தரவாதம் கொடுப்பவர்(கள்) உட்பட, ஆனால் அவர்களுடன் மட்டுமே நின்று விடாத, அவ்வாறு இருந்தால், FICLL-க்கு கடன் வாங்கியவர் கொடுக்க வேண்டிய எல்லா அல்லது ஏதேனும் தொகைகளை மீட்கவென மற்றும் அத்தகைய அனைத்து செயல்கள், வேலைகள் மற்றும் விஷயங்களை கடன் வாங்கியவர் ஏற்றுக்கொள்கிறார் மற்றும் ஒப்புக்கொள்கிறார். ஏனெனில் FICCL அத்தகைய ஏஜெண்ட் மற்றும் ட்ரஸ்டிக்கு வழங்கிய அதிகாரத்தை தொடர்ந்து ஏஜெண்ட்டுகள் மற்றும் ட்ரஸ்டிகளுக்கு உரிமை வழங்கப்படுகிறது.

24. அடைமானம் வைக்கப்பட்ட செக்யுரிடியை FICCL மீண்டும் தன்வசம் எடுத்துக் கொண்டால், அடைமானம் வைக்கப்பட்ட செக்யுரிடியை மீண்டும் பெற FICCL-ன் ஏதேனும் அதிகாரியை நியமிக்கும் சுதந்திரம் FICCL-க்கு உண்டு மற்றும் / அல்லது பொது ஏலம் அல்லது தனியார் ஒப்பந்தம் அல்லது வேறு வழிகளில் விற்பனை செய்ய அல்லது தனது தனிப்பட்ட விருப்பத்தின் பேரில் FICCL -ஆல் நிர்ணயிக்கப்பட்ட ஒரு விலையில் அடைமானம் வைக்கப்பட்ட செக்யுரிடியின் அனைத்து அல்லது ஏதேனும் பகுதியை விற்றல் அல்லது கையாளல் (விலை அல்லது அதனுடன் தொடர்புடைய வேறு ஏதேனும் விஷயங்கள் தொடர்பாக FICCL எடுக்கும் முடிவு இறுதியானது மற்றும் கடன் வாங்கியவரை கட்டுப்படுத்தும்) மற்றும் மேலே கூறப்பட்ட ஏதேனும் உரிமைகளை செயல்படுத்த, கைவரப் பெற, தீர்மானிக்க, சமரசம் செய்ய மற்றும் சமாளிக்க, மற்றும் அவ்வாறு செய்கையில் ஏதேனும் நஷ்டம் ஏற்படாமல் கவனித்துக் கொள்ள மற்றும் FICCL-ன் உரிமைகள் மற்றும் கடன் வாங்கியவருக்கு எதிராக திருத்த வழக்கு தொடுக்க மற்றும் அத்தகைய விற்பனையின் நிகர வருமானத்தை FICCL-க்கு திருப்பியளிக்காமல் நிலுவையில் உள்ளதை தீர்த்து வைக்க எடுத்துக் கொள்ள, கடன் வாங்கியவர் இங்கே ஒப்புக் கொள்கிறார் மற்றும் உறுதி படுத்துகிறார். FICCL-ன் விற்பனை கணக்கு மற்றும் கைவரப் பெறுதல்களை கடன் வாங்கியவர் ஏற்றுக் கொள்கிறார் மற்றும் அங்கே காண்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் பற்றாக்குறையையும், குறைபாட்டுத் தொகையையும் செலுத்த சம்மதிக்கிறார்.

25. மேலே கூறியபடி அடைமானம் வைக்கப்பட்ட சொத்துக்களை FICCL மீண்டும் தன்வசம் எடுத்துக்கொள்வதை தொடர்ந்து, அடைமானம் வைக்கப்பட்ட சொத்துக்களை விற்பனை செய்யவும், கடனின் கீழ், நிலுவையிலுள்ள அனைத்து தொகையையும் திரும்பியளிக்க கடன் வாங்கியவருக்கு ஒரு இறுதி வாய்ப்பை வழங்கவும் மற்றும் அடைமானம் வைக்கப்பட்ட சொத்துக்களை திரும்ப எடுத்துக் கொள்ளவும் விரும்புவதை கடன் பெற்றவருக்கு தெரிவிக்க, 7 நாட்களுக்கு முன்னதாக ஒரு நோட்டிஸை FICCL அனுப்பும். கடன்வாங்கியவர் இறுதி நோட்டிஸுடன் இணங்க தவறினால், சட்ட செயல்முறையின்கீழ், அனைத்து தேவையான நடவடிக்கைகளையும் முழுமையாக மற்றும் திறமையாக FICCL எடுக்கத் தொடங்கும். இதனால் பொது ஏலம் அல்லது தனியார் ஒப்பந்தம் அல்லது வேறு முறைகளில், குறிப்பிட்ட அடைமானம் வைக்கப்பட்ட சொத்துக்களை அனைத்து விதங்களிலும் கடன் வாங்கியவரின் இடர் மற்றும் செலவில் விற்பனை செய்யும். மேலும், கட்டுப்படாமல் மற்றும் எந்த இழப்பு அல்லது மதிப்புக் குறைவுக்கென பதில் கூறும் அவசியமின்றி எந்த விற்பனை ஒப்பந்தத்தையும் ரத்து செய்ய அல்லது வேறுபட மற்றும் இங்கே அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களில் எதையேனும் ஒன்றை உஅப்யோகிக்கும் கட்டுப்பாடின்றி அல்லது அத்தகைய அதிகாரங்களை உபயோகிக்கையில் உண்டாகும் ஏதேனும் இழப்புக்கான பொறுப்பின்றி மற்றும் பணத்தை வாங்குவதெற்கெனதிறமையான ரசீதுகளை கொடுக்கவும் மற்றும் FICCL மற்றும் வாங்குபவர் போன்று, அதுபோன்ற அனைத்து பிற செயல்கள் மற்றும் விஷயங்களின் விற்பனையை பூர்த்தி செய்யவும் FICCL-க்கு அதிகாரம் உண்டு. FICCL செய்யும் ஏதேனும் விற்பனை அல்லது பிற ஏற்பாடுகளின் ஒழுங்குமுறை தொடர்பாக எந்த ஒரு மறுப்பையும் கடன் வாங்குபவர் எழுப்ப மாட்டார். அது போலவே, அடைமானம் வைக்கப்பட்ட சொத்துக்களின் விற்பனை அல்லது ஏற்பாட்டுக்கென, ஏதேனும் ப்ரோக்கர் அல்லது ஏலம் விடுபவர் அல்லது பிற நபர் அல்லது FICCL-ஆல் பணியில் அமர்த்தப்பட்ட அமைப்பு அல்லது வாங்குபவர் தரப்பில் ஏதேனும் செயல் அல்லது வாராமையால் தோன்றக்கூடிய இழப்புக்கு FICCL பொறுப்பேற்காது.

FICCL

☞ ☞ ☞

**கடன் வாங்கியவர்** | **இணை - க்டன் வாங்கியவர்** | **அங்கீகாரம் பெற்ற கையொப்பமிடுபவர்**

26. FICCL-க்கு கொடுக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகையை முழுவதுமாக செலுத்திய பின்னர், FICCL-ன் கைகளில் அதிகப்படி தொகை இருந்தால், அதை தக்க வைத்து, குறிப்பிட்ட கூடுதல் தொகையை கடன் வாங்கியவருக்கு சொந்தமான வேறு ஏதேனும் பணம் அல்லது பணங்களுடன் சேர்த்து, தற்காலிகமாக FICCL தனது கைகளில் வைத்திருக்கும் மற்றும் அல்லது தனியாகவோ அல்லது வேறொருவருடன் கூட்டாகவோ அல்லது பிற நிறுவனங்கள் அல்லது கம்பெனியுடனோ கடன்கள், தள்ளுபடி பில்கள், கடன் கடிதங்கள், உத்தரவாதங்கள், கட்டணங்கள் அல்லது வேறு ஏதேனும் கடன்கள் அல்லது பில்கள், நோட்டுகள், கடன்கள் மற்றும் பிற நடப்பு கடப்பாடுகள், முன்னதாக இருந்திருக்கா விட்டாலும் கூட, அல்லது சட்ட கோரிக்கைகள் அல்லது கடன் வாங்கியவருக்கு எதிராக FICCL க்கு இருக்கக்கூடிய வட்டியுடன் கூடிய அடையாள அடைமானங்கள் அல்லது எதிரீட்டு சட்டம் அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய பரஸ்பர கடன் உள்ளிட்ட பொறுப்புக்களின் பாணியில் வேறு ஏதேனும் கணக்குகளிலோ அல்லது FICCL-க்கு கடன் வாங்கியவர் கொடுக்க வேண்டிய நிலுவையிலுள்ள அனைத்து பணங்கள் மற்றும் பணம் கலைப்புகளிலோ உபயோகிக்கப்படும்.

27. அடைமானம் வைக்கப்பட்ட செக்யுரிடியை FICCL மீண்டும் தன்வசம் எடுத்துக் கொண்டால், அடைமானம் வைக்கப்பட்ட செக்யுரிடியை மீண்டும் பெற FICCL-ன் ஏதேனும் அதிகாரியை நியமிக்கும் சுதந்திரம் FICCL-க்கு உண்டு மற்றும் / அல்லது பொது ஏலம் அல்லது தனியார் ஒப்பந்தம் அல்லது வேறு வழிகளில் விற்பனை செய்ய அல்லது தனது தனிப்பட்ட விருப்பத்தின் பேரில் FICCL -ஆல் நிர்ணயிக்கப்பட்ட ஒரு விலையில் அடைமானம் வைக்கப்பட்ட செக்யுரிடியின் அனைத்து அல்லது ஏதேனும் பகுதியை விற்றல் அல்லது கையாளல் (விலை அல்லது அதனுடன் தொடர்புடைய வேறு ஏதேனும் விஷயங்கள் தொடர்பாக FICCL எடுக்கும் முடிவு இறுதியானது மற்றும் கடன் வாங்கியவரை கட்டுப்படுத்தும்) மற்றும் மேலே கூறப்பட்ட ஏதேனும் உரிமைகளை செயல்படுத்த, கைவரப் பெற, தீர்மானிக்க, சமரசம் செய்ய மற்றும் சமாளிக்க, மற்றும் அவ்வாறு செய்கையில் ஏதேனும் நஷ்டம் ஏற்படாமல் கவனித்துக் கொள்ள மற்றும் FICCL-ன் உரிமைகள் மற்றும் கடன் வாங்கியவருக்கு எதிராக திருத்த வழக்கு தொடுக்க மற்றும் அத்தகைய விற்பனையின் நிகர வருமானத்தை FICCL-க்கு திருப்பியளிக்காமல் நிலுவையில் உள்ளதை தீர்த்து வைக்க எடுத்துக் கொள்ள, கடன் வாங்கியவர் இங்கே ஒப்புக் கொள்கிறார் மற்றும் உறுதி படுத்துகிறார். FICCL-ன் விற்பனை கணக்கு மற்றும் கைவரப் பெறுதல்களை கடன் வாங்கியவர் ஏற்றுக் கொள்கிறார் மற்றும் அங்கே காண்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் பற்றாக்குறையையும், குறைபாட்டுத் தொகையையும் செலுத்த சம்மதிக்கிறார்.

28. ஒருவேளை அத்தகைய விற்பனை மூலம் பெறப்பட்ட நிகரத் தொகை FICCL-க்கு கொடுக்க வேண்டிய நிலுவையிலுள்ள தொகையை விட குறைவாக இருந்தால், FICCL -ன் கைகளில் உள்ள வேறு ஏதேனும் பணம் மற்றும் கடன் வரவில் உள்ளவை அல்லது கடன் வாங்கியவருக்கு சொந்தமானவற்றை, FICCL-க்கு திருப்பித் தராமல் தற்காலிகமாக நிலுவையிலுள்ள எஞ்சிய தொகைக்காக உபயோகிக்கும் சுதந்திரம் FICCL-க்கு உண்டு.

29. இந்த உடன்படிக்கையின் கீழ் உருவாக்கப்பட்ட செக்யுரிடியை செயலாக்கவும், திரும்பப்பெறவும் தேவையான தற்செயலான மற்றும் அவசியமான அனைத்து அதிகாரங்களும் FICCL-க்கு உண்டு. இந்த உடன்படிக்கையின் கீழ் உருவாக்கப்பட்ட செக்யுரிடியை அமலாக்கவும்,திரும்பப் பெறவும் தேவையான அனைத்து செயல்கள், வேலைகள் மற்றும் விஷயங்களசெய்ய, கடன் வாங்கியவரின் இடர் மற்றும் செலவில், மாற்ற முடியாத விதத்தில் FICCL-ஐ கடன்வாங்கியவரின் வக்கீலாக கடன் வாங்கியவர் நியமிக்கிறார். இந்த உடன்படிக்கையின் கீழ், FICCL -க்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு பாதகமின்றி, கடன் வாங்கியவர் பின்வருபவற்றுக்கு ஒப்புக் கொள்கிறார்:

(i) தேவையானால், FICCL அல்லது ஏதேனும் ஏஜெண்ட், நியமிக்கப்பட்டவர், ட்ரஸ்டி அல்லது FICCL-ன் பிரதிநிதி -க்கு ஆதரவாக ஒரு முறையான அதிகார ஆவணத்தை, FICCL-ஆல் அறிவுறுத்தப்படும் பாணி மற்றும் பெயரில் நிறைவேற்ற வேண்டும்; மற்றும்

(ii) இந்த உடன்படிக்கையின் கீழ் உருவாக்கப்பட்ட செக்யுரிடி தொடர்பாக, FICCL-க்கு தேவைப்படக்கூடிய தகவல்கள், அறிக்கைகள், ரிடர்ன்கள், சான்றிதழ்கள் மற்றும் விவரவுரைகளை அளிக்க வேண்டும்.

30. கடன் வாங்கியவரால் FICCL-க்கு வழங்கப்பட்ட ஏதேனும் பிழையான அல்லது தவறான தகவல் காரணமாக அல்லது இந்த உடன்படிக்கையின் கீழான செக்யுரிடியை கட்ட அல்லது அமல்படுத்த தவறியதின் பலனாக கடன் கொடுத்தவருக்கு உண்டாகும் அல்லது ஏற்படும் அனைத்து விலைகள், கட்டணங்கள், செலவுகள், நஷ்டங்கள் மற்றும் / அல்லது சேதங்களுக்கு எதிராகவும், FICCL-க்கு கடன்வாங்கியவர் நஷ்ட ஈடு வழங்க வேண்டும்.

31. இந்த கடன் மற்றும் / அல்லது இந்த உடன்படிக்கையின் கீழான தனது உரிமைகள், ஆதாயங்கள் மற்றும் கடமைகள் எதையேனும் FICCL -உடன் நிறைவேற்றவென, அவற்றை ஒதுக்கவோ அல்லது மாற்றவோ, கடன் வாங்கியவருக்கு அதிகாரம் கிடையாது. இந்த உடன்படிக்கை அல்லது லோனின் கீழ் / தொடர்பாக நிறைவேற்றப்பட்ட ஏதேனும் ஆவணங்களில் உள்ளவற்றுக்கு எதிர்மாறாக, கடன் வாங்கியவருக்கு தகவல் அல்லது நோட்டிஸ் அனுப்பாமல், FICCL உதவியுடனோ அல்லது இன்றியோ, இந்தியாவிலோ அல்லது இந்தியாவுக்கு வெளியேயோ, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கமர்ஷியல் வங்கிகளுக்கோ அல்லது வேறு ஏதேனும் நிறுவனம், ட்ரஸ்ட், ஏதேனும் சங்கத்துக்கோ இந்த உடன்படிக்கையின் கீழான தனது உரிமைகள் அல்லது கடமைகளைஎந்த வகையிலும் ஒதுக்க மற்றும் / அல்லது மாற்ற மற்றும் /அல்லது புதுப்பிக்க FICCL-க்கு உரிமை இருப்பதை கடன் வாங்கியவர் ஒப்புக் கொள்கிறார். எனினும், இந்த லோனின் கீழ் மற்றும் / அல்லது இந்த உடன்படிக்கையின் கீழ் கடமைகள் ஒதுக்கப்பட்ட / மாற்றப்பட்ட / பாதுகாக்கப்பட்ட எந்த ஒரு நிறுவனத்துடனான ஒப்பந்தத்தின் அந்தரங்கம் தொடர்பாகவும் கடன் வாங்கியவர் கேள்வி எழுப்ப மாட்டார்.

32. மேலும் கீழ் கண்டவற்றுக்கு கடன்வாங்கியவர் உடன்படுகிறார் மற்றும் சம்மதிக்கிறார்:

(a) இந்திய ரிசர்வ் வங்கி ("RBI") மற்றும் /அல்லது கடன் தகவல் கழகம் (இந்தியா) லிமிடெட், மற்றும் / அல்லது இது தொடர்பாக RBI சார்பாக அதிகாரம் வழங்கப்பட்ட வேறு ஏதேனும் ஏஜென்சி, FICCL-ன் தொழில்முறை ஆலோசகர்கள், FICCL-ன் இணை நிறுவனங்கள்/துணை நிறுவனங்கள் மற்றும் சேவை வழங்குவோர், மூன்றாம் தரப்பினர் அல்லது இந்த உடன்படிக்கை மற்றும் / அல்லது கடன் தொடர்பாக கேட்டுக்கொள்ளப்பட்டவர்கள், மற்றும் / அல்லது சட்டம் அல்லது ஏதேனும் பொருந்தக்கூடிய கட்டுப்பாடுகளின் கீழ் தேவைப்பட்டால், நீதிமன்றத்தின் ஆணையின் பேரில் அல்லது ஏதேனும் சட்டரீதியான அமைப்பு, அது வழக்கமாக இணங்கும் ஒழுங்குமுறை ஆணையம் அல்லது மேற்பார்வை ஆணைய வேண்டுகோள் அல்லது ஆணையின் பேரில் கடன் வாங்கியவரின் கடன், கடன் வாங்கியவரின் கணக்கு மற்றும் இந்த உடன்படிக்கை, கடன் வாங்கியவர் பணம் கட்டத் தவறி விட்டது தொடர்பான தகவல் உள்ளிட்ட, ஆனால் அதனுடன் மட்டுமே கட்டுப்படாத பிற, அவ்வாறு ஏதேனும் இருந்தால், கடமைகளை நிறைவேற்றுவதில் கடன் வாங்கியவர் செய்யத் தவறியது போன்ற தகவல்கள் அவர்களுக்கு தெரிவிக்க மற்றும் வழங்க பொருத்தமானது மற்றும் அவசியமானது என்று FICCL கருதினால் வெளியிடலாம் மற்றும் பகிர்ந்து கொள்ளலாம் என்பதை கடன் வாங்கியவர் ஒப்புக்கொள்கிறார் மற்றும் சம்மதிக்கிறார்.

(b) கடன் வாங்கியவர்(கள்) FICCL-க்கு வழங்கிய மற்றும் வழங்கவுள்ள தகவல் மற்றும் தரவு கள் உண்மையானவை மற்றும் சரியானவை மற்றும் நேரடியாகவோ அல்லது மற்ற விதமாகவோ எதுவும் பிழையாக தெரிவிக்கப்படவில்லை என்று கடன் வாங்கியவர்(கள்) அறிவிக்கிறார் (கள்). கடன் வாங்கியவர்(கள்) தரப்பிலிருந்து ஏதேனும் பிழை அல்லது தவறு ஏற்பட்டால், FICCL உகந்ததாக கருதும் நடவடிக்கைகளை எடுக்க அதற்கு உரிமை உண்டு. மேலும் FICCL அவ்வப்பொழுது வேண்டும் பிற நிதித் தகவல்களை கடன் வாங்கியவர் (கள்) FICCL-க்கு வழங்க வேண்டும்.

(C) கடன் வாங்கியவர் (கள்):

(i) RBI அல்லது கடன் தகவல் கழகம் (இந்தியா) லிமிடெட் மற்றும் வேறு ஏதேனும் சட்டப்படியான அமைப்பு, ஒழுங்குமுறை அல்லது மேற்பார்வை ஆணையம் அல்லது அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்ட ஏஜென்சி ஆகியவை, குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில் தாங்கள் உரியதாக கருதும் பாணியில் FICCL-வெளியிடும் தகவல் மற்றும் தரவுகளை உபயோகிக்கலாம், செயல்முறைப்படுத்தலாம் மற்றும் பரப்பலாம் என்பதை ஏற்றுக்கொள்கிறார்(கள்); மற்றும்

(ii) இது தொடர்பாக FICCL-ஐ பொறுப்பானதாக அல்லது கடமைப்பட்டதாக ஆக்க மாட்டார்.

(iii) FICCL ஏற்கனவே அனுபவிக்கும் பிற உரிமைகளுடன் உடன்படிக்கையின் கீழ் கடன் வாங்கியவர்(கள்) பணம் கட்டத் தவறினால், கடன் வாங்கியவர்(கள்)-க்கு தெரிவிக்காமலேயே, கடன் வாங்கியவர் (கள்) -ன் பெயர் மற்றும் கடன் வாங்கியவர்(கள்) மேலே கூறியவாறு பணம் கட்டத் தவறிவிட்டார் என்ற உண்மையை RBI அல்லது வேறு ஏதேனும் தகுதிவாய்ந்த அதிகாரி அல்லது நீதிமன்றத்துக்கு கூற FICCL-க்கு அதிகாரமளிக்கிறது.

FICCL

☞ ☞ ☞

**கடன் வாங்கியவர்** | **இணை - க்டன் வாங்கியவர்** | **அங்கீகாரம் பெற்ற கையொப்பமிடுபவர்**

(d) இந்த உடன்படிக்கையை நிறைவேற்றுவதின் மூலம், எந்த ஒரு நேரத்திலும் கடன் வாங்கியவர் தொடர்பான எந்த ஒரு தகவல், அதன் பிசினஸ், FICCL அல்லது ஏதேனும் கிளை, தொடர்புடைய நிறுவனங்கள், இணை நிறுவனங்கள் ("குழு உறுப்பினர்") உள்ளிட்ட அதன் மற்றொரு குழு உறுப்பினருடன் வைத்துள்ள அதன் கணக்குகள் மற்றும் கடன் வாங்கியவரின் நிதி நிலைமை, வழங்கப்பட்ட வசதிகள் மற்றும் இனிமேல் கடன் வாங்கியவருக்கு வழங்கப்பட உள்ள வசதிகள் ஆகியவற்றை: (a) FICCL -ன் ஏதாவது அலுவலகம் அல்லது கிளை அல்லது மற்றொரு குழு உறுப்பினர் அல்லது FICCL-ன் ஏதேனும் உரிமை மாற்று பெற்றவர்; (b) ஏதேனும் ஏஜெண்ட், FICCL-ன் சேவை வழங்குபவர் அல்லது கடன் வாங்குபவருக்கு சேவைகள் அல்லது ஏதேனும் வசதியை வழங்குவது தொடர்பான மற்றொரு குழு உறுப்பினர்; (c) ஏதேனும் உத்தரவாதமளிப்பவர் அல்லது கடன் வாங்கியவரின் மூன்றாம் தரப்பு பாதுகாப்பு வழங்குனர்; (d) ஏதேனும் ஒழுங்குமுறை கட்டுப்பாட்டாளர் அல்லது FICCL மீது அதிகார வரம்புடன் அரசு அதிகாரி (e) நீதிமன்றம்; அல்லது (ஏதேனும் வங்கி அல்லது நிதி நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு வெளிப்படுத்த அல்லது பகிர, மாற்றமுடியாத வகையில் ஒப்புக்கொள்கிறது மற்றும் இசைகிறது.

**33.** FICCL கடைசியாக அறிந்த முகவரியில் அஞ்சல் / கூரியர் மூலம் கடன் வாங்கியவருக்கு தரப்பட்ட/அனுப்பப்பட்ட ஏதேனும் தகவல்/தொடர்பு, கடன் வாங்கியவர் மீது அனைத்து நோக்கங்கள் மற்றும் தேவைகளுக்குமென போதுமான சர்வீஸாக கருதப்படும்.

**34.** கடன் வாங்கியவர் இங்கே மேலும் உடன்படுகிறார் -

a). கடன் வாங்கியவர் எல்லா நேரங்களிலும் செக்யூரிட்டியின் போதுமான அளவு மற்றும் சந்தை மதிப்பை பராமரித்து எங்கே தேவைப்பட்டாலும், FICCL-க்கு தேவைப்படும் செக்யுரிடியில் அவசியமான இலாபங்களை வழங்க வேண்டும்.

b) இங்கே குறிப்பிடப்பட்டுள்ள பணம் நிலுவையில் இருக்கும் நேரத்தில், FICCL-ன் எழுதப்பட்ட முன் அனுமதியின்றி , வழக்கமாக செக்யுரிடி எந்த இடங்களில் வைக்கப்படுமோ/ பாதுகாக்கப்படுமோ மற்றும் சேமிக்கப்படுமோ அங்கிருந்து வழக்கமான வணிகப் போக்கைத் தவிர, ஆனால் இங்கே கொடுக்கப்பட்டுள்ள FICCL-ன் அதிகாரங்களுக்கு உட்பட்டு, கடனை கொடுத்தவர் எடுக்கவோ, அகற்றவோ /விற்கவோ முடியாது. FICCL-க்கு அத்தகைய செக்யுரிடி தேவைப்பட்டால், அது உடனடியாக FICCL-க்கு டெலிவரி செய்யப்படும்.

c) FICCL அவ்வாறு செய்ய கட்டுப்படாமல் அல்லது அதன் காரணமாக எந்த நஷ்டத்துக்கும் ஆளாகாமல் மற்றும் வழக்கின் விதிகள் மற்றும் நிவாரணங்களுக்கு பாரபட்சமின்றி அல்லது இல்லையெனில், பின்வருபவற்றுக்கான தகுதி பெறுகிறது -

i. கடன் வாங்கியவருக்கு நோட்டிஸ் அனுப்பாமல் மற்றும் கடன் வாங்கியவரின் இடர் மற்றும் செலவில் செக்யுரிடி வைக்கப்பட்டுள்ள/ சேமிக்கப்பட்டுள்ள எந்த ஒரு இடத்திலும்(களிலும்) மற்றும் / அல்லது தானாகவேவோ, அல்லது அதன் ஏஜெண்ட்டுகள் / பிரதிநிதி/ வக்கீல்கள் மூலமோ நுழையலாம் மற்றும் சோதிக்கலாம், மதிப்பிடலாம், காப்பீடு செய்யலாம் மற்றும் விற்கலாம்.

ii. கடன் வாக்கியவருக்கு சொந்தமான தனது கையிலுள்ள திருப்பியளிக்கப்படாத லோன் மற்றும் பணத்துக்கு விண்ணப்பித்தல் லோனின் நிலுவைத்தொகை, ஏதேனும் இருந்தால், மற்றும் அதனுடன், மீட்கப்படாமல் உள்ள செக்யுரிடி முழுவதையும் அல்லது ஒரு பகுதியை மீட்டல்

iii. சமரசத்தை முடிவு செய்ய, மத்தியஸ்தத்துக்கு சமர்ப்பிக்க மற்றும் செக்யுரிடி தொடர்பாக கடன் வாங்கியவரின் உரிமைகள், கடன்கள் மற்றும் கோரிக்கைகளை எந்த பாணியிலும் கையாள FICCL-க்கு உரிமை உண்டு.

d) எல்லா செக்யுரிடி(களும்) இலவசம் மற்றும் FICCL-க்கு ஆதாரவானதை விடுத்து பாக்கி எல்லா செக்யுரிடிகளும் கட்டணம் அல்லது வில்லங்கம் இன்றி இலவசமாக இருக்கும்.

e) வங்கிகள் வேண்டும் விதத்தில் தீ மற்றும் பிற இடர்களால் உண்டாகும் சேதம் அல்லது நஷ்டத்துக்கு எதிராக காப்பீடு செய்யப்பட்ட, காப்பீடு செய்யக்கூடிய இயல்பிலானவற்றை கடன் வாங்கியவர் எல்லா நேரங்களிலும் வைத்திருக்க வேண்டும் மற்றும் அத்தகைய பாலிசிகள் அனைத்தையும் FICCL-க்கு வழங்க வேண்டும். காப்பீடு செய்யக்கூடிய இயல்பிலானவையாக செக்யுரிடி இருப்பதால், சட்டப்படியானதாக இருந்தாலும் கூட, கடன் வாங்கியவரின் கணக்கில்/களில், பற்று மூலம் காப்பீடு செய்வது FICCL-ன் கடமையாக கருதப்படாது. FICCL-ன் தேர்வின்படி அத்தகைய காப்பீடுகளின் வருமானங்கள் செக்யுரிடிக்கு பதிலாகவோ அல்லது FICCL-ன் பாக்கித் தொகைகளின் திருப்தி தொடர்பாகவோ உபயோகிக்கப்படும்.

f) சட்ட ரீதியாகவோ அல்லது வேறு விதமாகவோ செக்யுரிடி தொடர்பான அனைத்து கட்டணங்களையும், வரிகளையும் கடன் வாங்கியவர் செலுத்த வேண்டும். அவ்வாறு செய்ய எந்த கட்டுப்பாடும் இன்றி, கடன் வாங்கியவரின் கணக்கில் (களில்) பற்று வைப்பது மூலம், கடன் வாங்கியவரின் செலவில், அத்தகைய அனைத்து கட்டணங்களையும், வரிகளையும் FICCL செலுத்தும்.

g) உடன்படிக்கை தொடரும் காலத்தில் கடன் வாங்கியவர் FICCL -க்கு அளிக்க வேண்டிய அனைத்து பாக்கிகள், கடன்கள் மற்றும் பொறுப்புக்களுக்கான செக்யுரிடியாக இந்த உடன்படிக்கை தொடருவது நோக்கமாக உள்ளது மற்றும் இது அவ்வாறே செயல் புரியும். இருந்தபோதிலும் -

(i) எந்த ஒரு நேரத்திலும் கடன் நிலுவை அல்லது கடன் கணக்குகளில் "ஒன்றுமின்மை" நிலுவை அல்லது ஏதேனும் தொகை பகுதியாக செலுத்தப்படல் அல்லது கணக்குகளின் ஏற்ற இறக்கம் இருத்தல் அல்லது

(ii) FICCL-ஆல் கோரிக்கை விடுக்கப்பட்ட பின்னரோ அல்லது வேறு விதத்திலோ அல்லது ஏதேனும் லோன் அல்லது லோனின் எதேனும் ஒரு பகுதி திருப்பி செலுத்தப்பட்டது அல்லது கோரிக்கைக்குப் பிறகு அவ்வாறு திரும்பச் செலுத்தப்படவில்லை

h) கடன் வாங்கியவர் ஒருவருக்கும் அதிகமாக இருந்தால், FICCL-க்கான அவன் / அவர்களின் பொறுப்பை ஒப்புக்கொள்ள மற்றும் ஏற்றுக்கொள்ள ஒவ்வொருவருக்கும் அல்லது அவர்களில் யாரேனும் ஒருவருக்கு அங்கீகாரம் மற்றும் அதிகாரம் வழங்கப்படுகிறது. கணக்கில் (களில்) ஏதேனும் பேமெண்ட்டை செலுத்துவது மூலம் அல்லது எந்த ஒரு பாணியிலும் எழுத்து மூலம் கூறுவது மூலம் அல்லது வேறு விதமாக FICCL-க்கான தங்களின் பொறுப்பை அவர்கள் வெளிப்படுத்துகின்றனர். மற்றும் ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்டவர்களால் FICCL-க்கான அத்தகைய ஒப்புக்கொள்ளல் மற்றும் அங்கீகாரம், அவர்கள் ஒவ்வொருவரின் சார்பாகவும் செய்யப்பட்டதாக கருதப்படுகிறது.

i) சட்ட அடிப்படையில் ஒரு பொதுக் கோரிக்கை / பணமாக கடன் மீட்கப்பட, கடன் வாங்கியவர் இங்கே தனது / தங்களின் இசைவை அளிக்கிறார். இதற்காக, எந்த ஒரு சட்டத்தின் கீழும் அத்தகையை இசைவை அவசியமாகும்.

j) FICCL-ஆல் வழங்கப்பட்ட தேவைக்காக மட்டுமே கடன் உபயோகிக்கப்பட வேண்டும், வேறு எந்த தேவைக்கெனவும் அல்ல என்பதை கடன் வாங்கியவர் ஏற்றுக் கொள்கிறார் மற்றும் MID மற்றும் பிற ஆவணங்களில் உள்ள அனைத்து விதிகள் மற்றும் நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்றை கடன் வாங்கியவர் கடன் தொடர்பாக நிறைவேற்றினால், அவை கவனத்தில் கொள்ளப்படும் மற்றும் இவற்றின் ஒரு பகுதியாக இருப்பதாக கருதப்படும.

FICCL

☞ ☞ ☞

**கடன் வாங்கியவர்** | **இணை - க்டன் வாங்கியவர்** | **அங்கீகாரம் பெற்ற கையொப்பமிடுபவர்**

**35.** அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் அமைந்துள்ள தகுதியுடைய நீதிமன்றங்களுக்கு இந்த உடன்படிக்கை தொடர்பான அனைத்து விஷயங்களிலும் பிரத்தியேக அதிகாரவரம்பு உண்டு என்பதை கடன் வாங்கியவர் உறுதியாக ஏற்றுக் கொள்கிறார். எனினும், கடன் வாங்கியவர் வேறு ஏதேனும் நீதிமன்றத்திலோ அல்லது தகுதி வாய்ந்த அதிகார நீதிமன்றத்திலோ நடவடிக்கைகளை தாக்கல் செய்யும் கடன் வாங்கியவரின் உரிமைகளை இது கட்டுப்படுத்தாது.

**36.** இந்த உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ளவை நன்கு படித்துப் பார்க்கப்பட்டு, **__________________ மொழியில் மொழி பெயர்க்கப்பட்டன மற்றும் கடன் வாங்கியவருக்கு விளக்கப்பட்டன மற்றும் அவன் / அவர்கள் அதில் கூறப்பட்டுள்ளவற்றை புரிந்து கொண்டனர் மற்றும் தொடர்ந்து பெற சந்தா கட்டினர்.

(*கடன் வாங்கியவரின் மொழியை குறிப்பிடவும்)

சாட்சியமாக கடன் வாங்கியவர் மற்றும் FICCL இருவரும் தனது / தங்களின் கை(களை) இதில் உள்ளவற்றின் மீது இங்கே கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேதி மற்றும் ஆண்டில் வைத்தனர்.

| | | |
|---|---|---|
| **கடன் வாங்கியவருக்காக (களுக்காக)** | | |
| **கடன் வாங்கியவரின் பெயர் :** **திரு. இரப்பா மணப்பா பேடிஜெர்** ........................................<br>........................................<br>**கையொப்பதாரரின் பெயர் :**........................................ | ]<br>]<br>]<br>] | ☞<br>........................................<br>(கையொப்பம்) |
| **துணை - கடனாளியின் பெயர் :** **திரு. மணப்பா மகாருத்ரப்பா பேடிஜெர்** ........................................<br>........................................<br>**கையொப்பதாரரின் பெயர் :** ........................................ | ]<br>]<br>]<br>] | ☞<br>........................................<br>(கையொப்பம்) |
| **ஃபுல்லர்டன் இந்தியா கிரெடிட் கம்பெனி லிமிடெட் சார்பாக**<br>**கையொப்பதாரரின் பெயர் :** ........................................ | ]<br>]<br>]<br>] | ☞<br>........................................<br>(கையொப்பம்) |

# லோன் சுருக்க அட்டவணை

இந்த கடன் சுருக்க அட்டவணை, இங்கே பெயரிடப்பட்ட கடன் கொடுத்தவர்(கள்) மற்றும் ஃபுல்லர்டன் இந்தியா கிரெடிட் கம்பெனி லிமிடெட்("கடன் உடன்படிக்கை") இருவருக்கும் இடையே நிறைவேற்றப்பட்ட 22 அக்டோபர், 2014 தேதியிடப்பட்ட லோன் உடன்படிக்கையின் முக்கிய பகுதியாகும்.

| | |
|---|---|
| குறிப்பு எண் : வாடிக்கையாளர் ID | 812100013109 |
| விண்ணப்ப குறிப்பு எண்./ கடன் கணக்கு எண். | 81214150000002 |
| FICC கிளை அலுவலக முகவரி | 8121 - 8121_ கிராமப்புற_கர்நாடக_பெல்_முனவல்லி |
| கடன் வாங்கியவர்(கள்) மற்றும் துணை - கடனாளிகளின் பெயர் மற்றும் முகவரி | பெயர்: திரு. இரப்பா மணப்பா பேடிஜெர்<br>முகவரி: 408A, பெய்லாஹோங்கல், பெய்லாஹோங்கல், பெய்லாஹோங்கல், பெல்காம், 591102 |
| | பெயர்: திரு. மணப்பா மகாருத்ரப்பா பேடிஜெர்<br>முகவரி: 408/A மவுனேஷ்வர் நகர், பெய்லஹோங்கல், பெய்லஹோங்கல், பெய்லஹோங்கல்,பெல்காம், 591102 |
| கடன் தொகை | ரூ. 60,000.00 /- (ரூ. அறுபதாயிரம் மட்டுமே) |
| வட்டி வீதம் | குறையும் நிலுவை அடிப்படையில், மாதாந்திர இடைவெளியுடன் இணைந்து ஆண்டுக்கு % 30.00 |
| கடனின் தன்மை | பாதுகாப்பான அடைமான லோன் - தனிமனிதர் |
| கடன் விதிகள் | 24 மாதங்கள் |
| கூடுதல் வட்டி ( பணம் கட்டத் தவறியதற்கென பொருந்தும்) | நிலுவையிலுள்ள தவணைகள் மீது ஆண்டுக்கு 30 % தாண்டாத ஒரு தொகை |
| ஆவணமாக்க கட்டணம் / செலவுகள் | ரூ. 1,500.00 /-தாண்டாத ஒரு தொகை |
| காப்பீட்டு ப்ரீமியம் | ரூ. 616.00 /- தாண்டாத ஒரு தொகை |
| கிராமசக்தி கார்டு கட்டணம் | ரூ. 50.00 /- தாண்டாத ஒரு தொகை |
| வரிகள் மற்றும் தீர்வைகள் | மேலேயோ அல்லது கடன் உடன்படிக்கையின் வேறு எங்கேனுமோ குறிப்பிடப்பட்ட அனைத்து கட்டணங்களும் வரிகள் சேர்க்கப்படாதவை மற்றும் சட்டரீதியான தீர்வைகள் மற்றும் அவற்றின் மீது, வரையறை இன்றி சேவை வரி மற்றும் மேல்வரி சுமத்தப்பட்டவை. |

## திருப்பிச் செலுத்தும் கால அட்டவணை

| செலுத்தப்பட வேண்டிய நிலையான மாதாந்திர தவணை தொகை (EMI) பெயர் | முதல் EMI தொடக்கத் தேதி | கடைசி EMI இறுதி தேதி |
|---|---|---|
| 24 | 15 டிசம்பர், 2014 | 14 நவம்பர், 2016 |
| **தவணை எண்ணிக்கைகள்** | **ஒவ்வொரு EMI-ன் இறுதி நாள்** | **EMI தொகை** |
| முதலில் இருந்து 23 தவணைகள் | 15 | ரூ. 3,350.00 /- |
| 24 தவணைகள் | 14 | ரூ. 5,490.00 /- |

| | |
|---|---|
| நடுவர் தீர்ப்பு மற்றும் அதிகார வரம்பு இடம் | பெங்களூரு |

கடன் வாங்கியவரின் பெயர் : திரு. இரப்பா மணப்பா பேடிஜெர்

☞ ........................................................................
(கையொப்பம்)

துணை - கடனாளியின் பெயர் : திரு. மணப்பா மகாருத்ரப்பா பேடிஜெர்

☞ ........................................................................
(கையொப்பம்)

ஃபுல்லர்டன் இந்தியா கிரெடிட் கம்பெனி லிமிடெட்
அங்கீகாரம் பெற்ற கையொப்பதாரரின் பெயர் ____________________

☞ ........................................................................
(கையொப்பம்)

*கடன் வாங்கியவர் மற்றும் துணை - கடனாளி கையொப்பமிட வேண்டும்*

# தேவை கடனுறுதிச் சீட்டு

தேதி : 22 அக்டோபர், 2014

இடம் : 8121 - 8121_ கிராமப்புற_கர்நாடக_பெல்_முனவல்லி

கோருவதின் பேரில் நான் / நாங்கள் திரு. இரப்பா மணப்பா பேடிஜெர் மற்றும் திரு. மணப்பா மகாருத்ரப்பா பேடிஜெர் கூட்டாக மற்றும் தனித்தனியாக மற்றும் நிபந்தனைகளின்றி, பதிவு அலுவலகத்தை 3-வது தளம், எண் -165, மேக் டவர்ஸ், PH ரோடு, மதுரவாயல், சென்னை - 600 095 என்ற முகவரியில் கொண்ட ஃபுல்லர்டன் இந்தியா கிரெடிட் கம்பெனி ("FICCL")-க்கு பணம் அளிக்க உறுதி கூறுகிறேன் அல்லது பெறப்பட்ட மதிப்புக்கு, பணம் கொடுப்பாணையாக ரூ. 60,000.00 (ரூபாய் அறுபதாயிரம் மட்டுமே) மற்றும் அதனுடன் ஆண்டுக்கு 30.00 % வட்டி வீதத்தில் மாதாந்திர இடைவெளியுடன் வழங்க உறுதியளிக்கிறேன். தொகை பெற முன்வைத்தல், குறிப்புரை மற்றும் குறிப்பு எதிர்ப்பு ஆகியவை இங்கே நிபந்தனைகளின்றி தள்ளுபடி செய்யப்படுகின்றன.
ஒருவருக்கும் மேற்பட்ட கையொப்பதாரர் இருந்தால், ஒவ்வொரு கையொப்பதாரரின் பொறுப்பும் கூட்டானதாகவும், பலவாகவும் இருக்கும்.

**கடன் வாங்கியவரின் பெயர்:** திரு. இரப்பா மணப்பா பேடிஜெர் ☞

ரூ. 1/- ரெவின்யு ஸ்டாம்ப்-ஐ இங்கு ஒட்டவும் (X)
**கடன் வாங்கியவர்**

**துணை - கடனாளியின் பெயர் :** திரு. மணப்பா மகாருத்ரப்பா பேடிஜெர் ☞

ரூ. 1/- ரெவின்யு ஸ்டாம்ப்-ஐ இங்கு ஒட்டவும் (X)
**துணை - கடனாளியவர**

*(குறிப்பு - (X) ரெவின்யு ஸ்டாம்ப்பின் நடுவே போகுமாறு கையொப்பமிட வேண்டும்)*

# கட்டணங்கள் தாள்

| | |
|---|---|
| தாமத பணம் செலுத்து கட்டணங்கள் | நிலுவையிலுள்ள தவணைகள் மீது ஆண்டுக்கு 30 % கட்டணம் விதிக்கப்படும். |
| காசோலை/ஏற்காத ECS கட்டணங்கள் (ஒவ்வொரு ஏற்காத காசோலைக்கும் /ஒவ்வொரு ECS வழங்கலுக்கும்) | ரூ. 300/- |
| ஸ்வேப் கட்டணங்கள் - ECS - உடனான பின்னாளிட்ட காசோலையின் பதிலீட்டுக்காக (ஒவ்வொரு முறையும்) | ரூ. 500/- |
| லோன் ரத்து கட்டணங்கள் (முதல் EMI-க்கு முன்னதாக லோன் ரத்து செய்யப்பட்டது) | கடன் வழங்கும் காசோலையை பணமாக்கு முன்னர் கடன் ஆவணங்கள் மீது ரூ. 1000/- மற்றும் ஸ்டாம்ப் ட்யூட்டி விதிக்கப்படும். மற்றபடி முன்செலுத்துதல் கட்டணங்கள் விதிக்கப்படும். |
| முன்செலுத்தும் கட்டணங்கள் | a) 365 நாட்களுக்கு முன்னதாக எந்த முன்செலுத்துதலும் அனுமதிக்கப்படாது.<br>b) லோனின் எந்த பகுதி முன்செலுத்துதலும் அனுமதிக்கப்படாது.<br>(c) ஒருவேளை நிலுவையிலுள்ள வட்டித் தொகைகளுடன் முழு கடனும் முன்னதாக செலுத்தப்பட்டால்:<br>1. 365 நாட்களுக்குப் பிறகு: உரிய தேதிக்கு முன்னதாக பணம் செலுத்துவது மீது நிலுவையிலுள்ள அசல் லோன் தொகையின் 5 %<br><br>அல்லது அவ்வப்பொழுது FICCL குறிப்பிடும் அத்தகைய பிற தொகைகள் |
| அடைமானம் வைக்கப்பட்ட கடனீட்டின் விளக்கம் | **பல உபயோக உட்வொர்கிங் இயந்திரம்** |

*மேற்கூறிய அனைத்து கட்டணங்களும் சேவை வரியை உள்ளடக்கியவை.

# லோன் தொகையை வழங்குவதற்கான ஆணைகள்

**தேதி : 22 அக்டோபர், 2014**

**பெறுனர்**
**ஃபுல்லர்டன் இந்தியா கிரெடிட் கம்பெனி லிமிடெட்**

- - - - - - - - - - - - - - - - - - - -

- - - - - - - - - - - - - - - - - - - -

**8121 - 8121_ கிராமப்புற_கர்நாடக_பெல்_முனவல்லி**
- - - - - - - - - - - - - - - - - - - -

- - - - - - - - - - - - - - - - - - - -

**பொருள்: வழங்குவதற்கான அங்கீகாரம்**

**ஐயா,**

தயவுசெய்து **60,000.00** -ல் இருந்து **திரு. இரப்பா மணப்பா பேடிஜெர்** வரை கடன் தொகையை வழங்குவதற்கான விண்ணப்பத்தை பார்க்கவும். தயவுசெய்து இங்கே தரப்பட்டுள்ள பெயர் மற்றும் பாணியில் கடன் வழங்கும் காசோலையை தயாரிக்கவும்:

| பெறுநர் பெயர் | தொகை (ரூ.) |
|---|---|
| | 57,834.00 |

மேற்கூறிய பெறுநருக்கு ஆதாரவான கடன் தொகை விநியோகம், கடன் வசதி தொடர்பான எனது / நமது உரிமையை பாதிக்காது. மேற்கூறிய பெறுநரின் ஆதரவிலான கடன் விநியோகம், வழங்கப்பட்ட மற்றும் என்னால்/நம்மால் பெறப்பட்ட கடனாக கருதப்படும்.

நன்றி

**கடன் வாங்கியவரின் பெயர் :** **திரு. இரப்பா மணப்பா பேடிஜெர்**

☞ ..............................................................................
(கையொப்பம்)

**துணை - கடனாளியின் பெயர் :** **திரு. மணப்பா மகாருத்ரப்பா பேடிஜெர்**

☞ ..............................................................................
(கையொப்பம்)

**உறுதி படுத்துதல்**

**கடன் தொகை வழங்கல் தொடர்பாக பின்வரும் விளக்கத்துடனான கேஷ்/ காசோலை, எனக்கு/நமக்கு அனுப்பட்டு, பெறப்பட்டதாக நான் / நாங்கள் ஒப்புக் கொள்கிறோம்.**
**1. ரொக்கத்தொகை வழங்கல்:**

| பெறுநர் பெயர் | தொகை (ரூ.) |
|---|---|
| | 57,834.00 |

**2. காசோலை வழங்கல்:**

| காசோலை எண் | தொகை (ரூ.) | தேதி | வங்கி | ஆதரிக்கும் |
|---|---|---|---|---|
| | | | | |

நன்றி

**கடன் வாங்கியவரின் பெயர் :** **திரு. இரப்பா மணப்பா பேடிஜெர்**

☞ ..............................................................................
(கையொப்பம்)

**துணை - கடனாளியின் பெயர் :** **திரு. மணப்பா மகாருத்ரப்பா பேடிஜெர்**

☞ ..............................................................................
(கையொப்பம்)

# தேசிய எலக்ட்ரானிக் ஃபண்ட் டிரான்ஸ்ஃபர் திட்டம் மூலம் எலக்ட்ரானிக் ஃபண்ட் டிரான்ஸ்ஃபர் வழியாக கடன் பகிர்வீட்டிற்கான விண்ணப் படிவம்.

**தேதி :** [ 22 அக்டோபர், 2014 ]

**பெறுனர்**
**ஃபுல்லர்டன் இந்தியா கிரெடிட் கம்பெனி லிமிடெட்**

**8121 - 8121_ கிராமப்புற_கர்நாடக_பெல்_முனவல்லி**

**பொருள் :** தேசிய எலக்ட்ரானிக் ஃபண்ட் டிரான்ஸ்ஃபர் மூலம் எலக்ட்ரானிக் ஃபண்ட் டிரான்ஸ்ஃபர் வழியாக கடன் வழங்கப்படல்
**குறிப்பு :** வாடிக்கையாளர் ID [ **812100013109** ]
கடன் கணக்கு எண் : [ **81214150000002** ]

**அன்புள்ள ஐயா,**
மேலே குறிப்பிடப்பட்ட எனது / நமது கடன் விண்ணப்பம் தொடர்பாக, வழங்கப்பட்ட தொகையான ரூ. **57,834.00** (ரூபாய் **ஐம்பத்து ஏழாயிரத்து எண்ணூற்று முப்பத்து நான்கு** மட்டுமே)-ஐ நேரடியாக அனுப்புமாறு நான் / நாங்கள் இங்கே ஃபுல்லர்டன் இந்தியா கிரெடிட் கம்பெனி லிமிடெட்-இடம் நிபந்தனையின்றி கூறுகிறோம். (EMI வட்டி, ஆவணமாக்கல் கட்டணங்கள் மற்றும் செயல்முறை கட்டணங்களை கழித்துக் கொண்ட பின்னர்) பின்வரும் விவரங்களின் படி:-

**பயனாளியின் விவரங்கள்**

| | |
|---|---|
| பயனாளியின் வங்கி பெயர் | |
| பயனாளியின் வங்கி a/c பெயர் | |
| பயனாளியின் வங்கி a/c # | |
| பயனாளியின் வங்கி கணக்கு வகை | ☐ சேமிப்பு ☐ நடப்பு ☐ ரொக்கத்தொகை கடன் |
| பயனாளியின் வங்கி கொடுக்க வேண்டிய இடம் | |
| பயனாளியின் வங்கி கிளை IFSC குறி எண் | |
| MICR குறி எண் | |
| அனுப்ப வேண்டிய தொகை | 57,834.00 ( **ஐம்பத்து ஏழாயிரத்து எண்ணூற்று முப்பத்து- நான்கு** ) |

பின்வருமாறு நான்/ நாங்கள் இங்கு அறிவிக்கிறேன்:

- மேலே கூறப்பட்ட விவரங்கள் அனைத்தும் எனது/எங்களின் அறிவை எட்டியவரை உண்மையானவை, சரியானவை மற்றும் முழுமையானவை. கட்டண அறிவுறுத்தலில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களின் துல்லியத்தன்மைக்கு நான் / நாங்கள் பொறுப்பேற்கிறோம்.
- ஃபுல்லர்டன் இந்தியா, நல்ல நம்பிக்கையில், எலக்ட்ரானிக் ஃபண்டு டிரான்ஸ்ஃபருக்கான ஆணைகளுக்கு இணங்க கட்டண ஆணைகளை நிறைவேற்றியிருந்தால், ஃபுல்லர்டன் இந்தியா நிறைவேற்றும் கட்டண ஆணைகளுக்கு நான் / நாங்கள் கட்டுப்படுகிறோம்.
- மேலே கூறப்பட்ட பயனாளிக்கு ஆதரவாக வழங்கப்படும் லோன், எங்களுக்கு வழங்கப்பட்ட மற்றும் என்னால் / எங்களால் பயன்படுத்தப்பட்ட லோனாக கருதப்படும். மேற்கூறிய பயனாளி பெறுனருக்கு லோன் தொகையை வழங்கியது கடன் வசதி தொடர்பான எனது / எங்களின் கடமைப்பொறுப்பை பாதிக்காது.
- முழுமையற்ற தகவல் காரணமாக உண்டாகும் ஏதேனும் இழப்பு அல்லது சேதம், அனுப்பீட்டு முறையில் தாமதம், எலக்ட்ரானிக் தகவலின் டெலிவரி அல்லது டெலிவரி செய்யாமை, அல்லது அனுப்பீட்டு முறையில் ஏதேனும் பிழை, விடுபாடு அல்லது பிழை அல்லது அவற்றுடனேயே டெலிவரி செய்து விடல், அல்லது தனது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட ஏதேனும் செயல் அல்லது நிகழ்ச்சி, ஆகியவற்றுக்கென ஃபுல்லர்டன் இந்தியா பொறுப்பேற்காது. மேலே கூறப்பட்டவை மட்டுமின்றி, ஃபண்ட்ஸ் டிரான்ஸ்ஃபரை முழுமையாக்குவதில் ஏதேனும் தாமதம் அல்லது ஃபுல்லர்டன் இந்தியா தரப்பில் ஏதேனும் அலட்சியம் காரணமாக பேமெண்ட் ஆணைகளைத் தொடர்ந்து ஃபண்டு டிரான்ஸ்ஃபர் செய்கையில் உண்டாகும் பிழை காரணமாக ஏற்படும் நஷ்டத்தால் பேமெண்ட்டைப் பெற தாமதமானால், தாமதமான காலத்துக்கு வங்கி வீதத்தில் வட்டியை வழங்குவதுடன் ஃபுல்லர்டன் இந்தியாவின் கடமைப்பொறுப்பு முடிவடைகிறது.
- என்னாலோ/ எங்களாலோ இந்த விண்ணப்ப படிவத்தில் கொடுக்கப்பட்ட பிழையான தகவல் காரணமாக அனுப்பும் பணத்தை தவறான பயனாளியின் கணக்கில் சேர்த்தல் அல்லது சேர்க்காமல் போதலுக்கு ஃபுல்லர்டன் இந்தியா பொறுப்பேற்காது.
- பயனாளி வங்கி உள்வரும் பணத்தின் மீது கட்டணங்களை விதிக்கும் மற்றும் அதை அனுப்பப்பட்ட பணத்திலிருந்து கழித்துக் கொள்ளும்.

அனைத்து தேசிய எலக்ட்ரானிக் ஃபண்டு டிரான்ஸ்ஃபர் ("NEFT") ஆணைகளும் மாற்ற முடியாதவை மற்றும் NEFT மூலமாக அனுப்பப்படும் பணம் தொடர்பாக, பேமெண்ட்டை நிறுத்தும் ஆணைகளுக்காக வசதி எதுவும் கிடையாது என்பதை நான் புரிந்து கொண்டுள்ளேன்.

நன்றி

**கடன் வாங்கியவரின் பெயர் :** **திரு. இரப்பா மணப்பா பேடிஜெர்** ☞

அங்கீகாரம் பெற்ற கையொப்பதாரரின் பெயர் (தனியாள் வணிக முறை, கூட்டாளி வணிக முறை & நிறுவனங்களுக்கென) ............................ (கையொப்பம்)

**துணை - கடனாளியின் பெயர் :** **திரு. மணப்பா மகாருத்ரப்பா பேடிஜெர்** ☞

அங்கீகாரம் பெற்ற கையொப்பதாரரின் பெயர் (தனியாள் வணிக முறை, கூட்டாளி வணிக முறை & நிறுவனங்களுக்கென) ............................ (கையொப்பம்)

# கடன் வாங்குபவர் / துணை - கடனாளி / பிணையாளி கல்வி அறிவற்றவராக இருந்தால் அல்லது கடன் ஆவணங்களை வட்டார மொழியில் நிறைவேற்றுபவர் அல்லது குருடராக இருந்தால் அவர்களுக்கான அறிவிப்பு

**தேதி : 22 அக்டோபர், 2014**

**:.புல்லர்டன் இந்தியா கிரெடிட் கம்பெனி லிமிடெட் ("FICCL")**

**8121 - 8121_ கிராமப்புற_கர்நாடக_பெல்_முனவல்லி**

**அன்புள்ள ஐயா,**

**பொருள்:** பாதுகாப்பான அடைமான லோன் - தனிமனிதர் கடன் தொகை ரூ. 60,000.00/- வட்டி வீதம் ஆண்டுக்கு 30.00 % காலம் 24 மாதங்கள்

நான் / நாங்கள் இங்கே 22 அக்டோபர், 2014 தேதியிடப்பட்ட கடன் உடன்படிக்கையை குறிப்பிடுகிறோம். இதன் மூலம், கூறப்பட்ட கடன் உடன்படிக்கையின் விதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி, கூறப்பட்ட கடன் / வசதியை FICCL எனக்கு /எங்களுக்கு வழங்கியது.

நான் / நாங்கள் **கல்வியறிவற்றவர்கள் / ஆங்கிலம் அறியாதவர்கள்/கண்பார்வை இழந்தவர்கள் என்பதால், மேலே கூறப்பட்ட FICCL வரையறுத்த கடன் உடன்படிக்கை, கடனுறுதிச் சீட்டு, உத்தரவாத கடிதங்கள், கடனீடு ஆவணங்கள், அறிவிப்புக்கள் மற்றும் பொறுப்பேற்புக்கள் மற்றும் அனைத்து பிற கடன் ஆவணங்கள் அனைத்து விதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் இந்த கடிதத்தின் அறிவிப்புக்கள் மற்றும் உறுதிபடுத்துதல்கள் ஆகிவற்றையும் கூட ______________ மொழியில் இந்த உறுதிமொழியில் இரண்டாவதாக கையொப்பமிட்ட ***திரு. திரு. இஸ்மாயில் ஹனமாசாகர் அவர்கள் எனக்கு/ எங்களுக்கு படித்துக் காட்டி விளக்கினார் மற்றும் நான் / நாங்கள் மேலே கூறப்பட்ட ஆவணங்களை, அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளை முழுவதும் புரிந்து கொண்ட பின்னர் நிறைவேற்றினோம் என்பதை நான் / நாங்கள் இங்கே அறிவிக்கிறோம் மற்றும் உறுதி படுத்துகிறோம்.

இந்த குறிப்பிட்ட கடனின் கீழான கடமைப்பொறுப்புக்கள் தீர்க்கப்படும் வரை , குறிப்பிட்ட கடன் உடன்படிக்கை மற்றும் கடன் ஆவணங்கள், கடனீடு ஆவணங்கள் மற்றும் FICCL நிர்ணயித்த அனைத்துப் பிற ஆவணங்களின் அனைத்து விதிகள் மற்றும் நிபந்தனைகள், என்னை / எங்களை கட்டுப்படுத்தும் என்று நான் / நாங்கள் இங்கே மேலும் அறிவிக்கிறோம் மற்றும் உறுதிபடுத்துகிறோம்.

***நடைமுறை சாத்தியமற்ற வார்த்தைகளை நீக்கவும்.*
****FICCL-ன் ஊழியர் / சேனல் கூட்டாளி*

☞

**திரு. இரப்பா மணப்பா பேடிஜெர்**
கடன் வாங்கியவரின் பெயர் மற்றும்
கையொப்பம் அல்லது
இடது / வலது பெருவிரல் ரேகை

☞

**திரு. மணப்பா மகாருத்ரப்பா பேடிஜெர்**
துணை - கடனாளியின் பெயர் &
கையொப்பம் அல்லது இடது /
வலது பெருவிரல் ரேகை பதிவு

☞

**திரு. இஸ்மாயில் ஹனமாசாகர்**
பெயர் & கையொப்பம்
(ஃபுல்லர்டன் ஊழியர் / சேனல் கூட்டாளி . இவர் அனைத்து கடன்
ஆவணங்களின் விதிகளையும் கடன் வாங்கியவர் /
துணை - கடனாளி / உத்தரவாதமளிப்பவருக்கு விளக்கினார்)